RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s240

OPEN ACCESS

# பூமணியின் அஞ்ஞாடியில் சமூக நல்லிணக்கக் களங்கள்

## பா. சுதாசங்கரி [அ, *], இ. பேச்சிமுத்து [அ]

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி (தன்னாட்சி), மதுரை-625009, தமிழ்நாடு, இந்தியா.

# Social Reconciliation Domains in Poomani's Agnaadi

## P. Sudhasankari [a, *], I. Petchimuthu [a]

[a] Department of Tamil, Thiagarajar College (Autonomous), Madurai-625009, Tamil Nadu, India

* Corresponding Author:
sudhasankariteacher3@gmail.com

Received: 13-03-2021
Revised: 24-01-2022
Accepted: 29-01-2022
Published: 28-02-2022

Check for updates

**ABSTRACT**

His family is a full-time farmer. If only he was good enough and everyone wants to be good. That is why he became accustomed to social harmony with everyone, regardless of caste, religion or race. Agnaadi novelist Boomani has pointed out with various evidences of the harmony he has manifested in various evolutions, such as helping others in times of distress, speaking comfortingly and being with them. Andy's concern for his surviving friend Vannan Gudi, Marie, and his family, as well as his assistance to the Nadar people, speaks volumes that he is a social peace activist. The harmony he has with the Parakudi Sanas is as great as the harmony he has over the Nadar and Nayakar castes. Man, not only symbolizes how to love man but also sets an example for future generations the upper castes will speak proudly of Andy's seed. They say he inquires about crop yields just as they inquire about spots. This article describes Andy's professional harmony with this aristocrat.

**Keywords:** Agnaadi, Boomani, Novel, Social Reconciliation.

## முன்னுரை

தொழில் என்பது ஒற்றைச் சொல்லால் விவரிக்க இயலாதது. அது மனிதனின் வாழ்வியலோடு தொடர்புடைய சொல்லாக வெளிப்படுகிறது. “வினையே ஆடவர்க்கு உயிர்” என்கிறது குறுந்தொகைப் பாடல். மக்கள் ஓரிடத்தில் நிலையான வாழ்க்கையை வாழத் தொடங்கியபின் வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டனர். பூமணியின் அஞ்ஞாடி நாவலின் முக்கியக் கதாப்பாத்திரமான வேளாண் குடிமகன் ஆண்டியின் தொழில்சார் நல்லிணக்கம் பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம்.

பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராகக் கருதப்பட்டனர் “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்” என்கிறது திருக்குறள். தமிழர் உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும் போற்றினர். “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்னும் மணிமேகலை கூறும் மந்திரம் அஞ்ஞாடியில் உழவின் மூலம் உச்சரிப்புப் பெறுகிறது. உழவுக்குச் சிறப்புப்பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமுமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை”

என்னும் திருக்குறள் உழவுத் தொழிலின் சிறப்பினை எடுத்துக்காட்டுகிறது (Meiyappan, 1989).

“ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லே

என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே”

என்னும் திரையிசைப் பாடல் உழவின் சிறப்பை எடுத்துரைக்கிறது.

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்”

என்ற மகாகவி பாரதியின் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது (Padmanabhan, 2007).

கலிங்கலூர்க்காரர்களின் சகல ஊழியத்துக்கும் மேலூர்ப் பகடைகள் இருந்தார்கள். தச்சு, கொல் வேலைகளுக்கு வேப்பங்காட்டில் ஆசாரி உண்டு. ஊரில் கையகல நிலமில்லாதவர் கிடையாது. அரைவாசிக்கு ஓரனேர் ஈரனேர்ச் சம்சாரிகள். விவசாயம் கதிக்க நடந்தது. சொற்ப நிலம் உள்ளவர்கள் வெளியூருக்குக் கூலி வேலைக்கும் போவார்கள். கதிரறுப்பில் அவர்களை யாரும் மிஞ்சமுடியாது. எவ்வளவு நிலமானாலும் மலைக்க மாட்டார்கள். விடியக்காலம் கிளம்பினால் ஒரு மூச்சு அறுப்பு. காடு நிறைய கதிர்க்கட்டுகள் உருண்டுவிடும். அதில் கிடைக்கும் கூலியே ஒரு வெள்ளாமை அளவுக்கு இருக்கும் (Poomani, 2020).

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்”

“யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”

என்ற பொன்மொழிகளுக்கேற்ப உயர்சிந்தனை உடையவர்கள் தமிழர்கள். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற புறநானூற்று வரி உலக மக்களை ஒருங்கிணைத்து உறவுகளாக்கியது என்பதற்கு இணங்க பூமணி அவர்கள் அஞ்ஞாடி நாவலில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது (Manavazhahan, 1921).

## ஆண்டியின் தொழில்

பரம்பரை பரம்பரையாக தந்தை சில்லானின் காலந்தொட்டே ஆண்டி மிகப்பெரும் சம்சாரியாகக் காட்சி தருகிறான்.வான்புகழ் வள்ளுவனால் அதிகாரம் பெற்ற உழவின் தலைமகனாகத் திகழும் ஆண்டி, உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்கிற வள்ளுவனின் வாய்ச்சொல்லை அஞ்ஞாடியில் மெய்ப்பித்து நிற்கிறான்.ஈசனால் படைக்கப்பட்ட இந்திரனின் வழிவந்த வேளாளனாகிய ஆண்டி துறந்தார்க்கும், துவ்வாதார்க்கும், இறந்தார்க்கும் துணையாகத் திகழும் உழவின் தலைமகனாகத் தரிசனம் தருகிறான்.

உலகில் உயர்ந்த தொழில்கள் எத்தனை இருந்தாலும் உழவுக்கு நிகரானது எதுவும் கிடையாது. உழவு என்பது தொழில் மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்குமான ஆதார சக்தியாகும். எனவே தான் இத்தகைய தன்னலமற்ற தியாகத் தொழிலாகிய உழவைத் தாங்கி நிற்கிறான் அஞ்ஞாடியின் தலைமைப் பாத்திரமான ஆண்டி.நிலம் கொடுத்து, விதை கொடுத்து, விதைத்துக்கொடுத்து அரவணைக்கப்பட்ட ஏனைய குடிகளெல்லாம் உயர்ந்து நிற்க ஆண்டிக் குடும்பனும் அவனது குடும்பமார் குடியும் சுய அடையாளங்களையும் பண்பாடுகளையும் ஒருபோதும் இழக்க மறுத்து இறுதிவரை மண்ணில் உழன்று திரிகிறார்கள். இங்கனம் ஆண்டி செய்யும் தொழில்களில் பாகுபாடுகளின்றி நல்லிணக்கம் மலர்ந்து நிற்பதை அறிய முடிகிறது.

சோளக் கருதறுப்பு மட்டும் அவர்களுக்குத் தோதுப்படாது. சூட்டிகையாக வேலை ஓடாது. அதனால் கொத்து குறைந்து விடும். கருதறுப்புக்காகவே மேலூரிலிருந்து மேல்சாதிக்காரர்கள் வருவார்கள். கோனார், செட்டியார், கவுண்டர், நாயக்கர், தேவர் என்று பல சாதியும் உண்டு. வாட்டசாட்டமான பெண்கள் தான் அதிகம் படைக்குருவிகளாகத் திரண்டு வருவார்கள். வாகான பெரிய பன்னரிவாளால் கொஞ்ச நேரத்தில் தட்டைகளை அறுத்துச் சாய்த்து விடுவார்கள்.

“பிறகு யார் வேண்டுமானாலும் கருதறுத்துக்கொள்ளலாம். கருது பொறுக்கித் தட்டைகட்டிச் சூந்துவைத்த கையோடு கட்டை வெட்டு நடக்கும். ரெம்பக் குனியாமல் நெடுங்கணை மம்பட்டியால் சோளக்கட்டை வெட்டுவதற்கு அவர்கள் தான் லாயக்கு. சும்மா சொல்லக்கூடாது. அவர்களுக்குக் கொடுக்கும் தசகூலி செமிக்கும்” (Poomani, 2020).

ஆண்டியின் காடுகளில் தொடர்ந்து அஞ்சாறுநாள் வேலை நடக்கும். கலிங்கலாண்டி, ஏத்தா, கருப்பி என்று கூப்பிடும் குரல் கேட்டவண்ணமிருக்கும். ரெண்டு பேரும் சளைக்கமாட்டார்கள். “தாயி ஆத்தா நாச்சியாரு பூச்சம்மா என்று மாற்றுக்கதை போடுவார்கள். பொழுதடையச் சம்பளக்காரன் கொத்தளக்கும்போது தொட்டிவீடு பிடிக்காமல் சனங்கள் கூடியிருப்பார்கள்” (Poomani, 2020).

“ஆண்டியின் வீட்டுக்கு ஆள் வந்த வண்ணம் இருக்கும். அயலூரிலிருந்து பெரிய பெரிய சம்சாரிகள் தேடி வருவார்கள். எல்லாருக்கும் கருப்பிதான் விதை வித்தைக் கொடுத்தனுப்புவாள். சகல விதைப்பண்டமும் வீட்டிலிருக்கும். அவள் அதில் மன்னச்சி. சித்தெறும்பு மாதிரி சேர்த்து வைத்திருப்பாள். ஆள் வர வரத் திருணையிலிருந்து ஆண்டியின் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும். விதைகளைச் சளைக்காமல் அளந்து போடுவாள் சிலர் அருந்தலான பண்டம் கேட்பார்கள்” (Poomani, 2020).

## பயிற்றுக்குழி இடுதல்

“ஆடிப்பட்டம் தேடி விதை” என்பது நம் முன்னோர் பழமொழி. ஆடிப்பெருக்கு நாளில் கிராமப்புற மக்கள் ஆடிப் பதினெட்டன்று பயிர் பச்சைகளைக் குழி தோண்டி விதைப்பார்கள் என்பது தமிழர் மரபு.சுரைக்காய், பூசணி, பாகற்காய், அவரை, புடலை, பீர்க்கங்காய் முதலிய காய்கறிகளை வீட்டுக்கொல்லைப் புறத்திலிருக்கும் இடத்தில் விதைப்பர். கிடைக்கும் விளைச்சலில் தானும் தன்னைச் சேர்ந்த சுற்றத்தாரும் உண்டு மகிழ்வர். இதன் மூலம் இயற்கையான காய்கறிகளும், உறவுகளும் கிடைக்கும் என்பதைப் பூமணி அவர்கள் தன்னுடைய அஞ்ஞாடி நாவலில் எடுத்துரைத்துள்ளார்.

“சொர வெதையிருக்கா கொட்டாரத்துல ரெண்டு குட்டம் போடணும்.” ஆண்டி தயங்கமாட்டான். “கருப்பி முடிஞ்சு வச்சிருப்பாளே. கேட்டு வாங்கிட்டுப் போங்க” அவள் விதை கொடுத்த கையோடு அதைக் குட்டம் போட்டு கொடி வளர்க்கும் பக்குவத்தையும் சொல்லியனுப்புவாள்” (Poomani, 2020).

## சமூக நல்லிணக்கவாதி ஆண்டி

மாரியில் தொடங்கி மருதன் வரை தலைமுறை தலைமுறையாக வண்ணாக்குடியை ஆதரிக்கும் ஆண்டியின் செயலை அளவிட வார்த்தையில்லை. தனது குடும்பத்தின் நலனை விட பிற சமூகத்தின் மீது ஆண்டி கொள்ளும் அரவணைப்பு, நாவலில் அளவற்று நிற்கிறது.சண்முகம்-மாலையம்மாள் எனத் தொடரும் நாடார் குடிக்கான ஆதரவு அடுத்து வரும் தங்கையா-தெய்வானை காலத்திலும் தொட்டுத் தொடர்ந்து நாடார் குடி கிளைவிட்டுப் படர்வதற்கு ஆண்டி என்னும் ஆதார சக்தியே காரணமாகும்.

“நாவலாசிரியர் கதையில் எத்தகைய பண்புடைய மனிதனைக் காட்ட வேண்டுமென்று விரும்புகிறாரோ அந்தக் குறிப்பிட்ட பண்பு நிலைக்கு ஏற்பக் கதைமாந்தரின் இயல்புகளைச் சித்தரித்துக் காட்டுகிறார்.” (Balachandran, 1976)

என சு.பாலச்சந்திரன் குறிப்பிடுவது போல ஆண்டி என்னும் தலைமைப் பாத்திரத்தை ஆசிரியர் விழுமியங்கள் பல கொண்ட அசாத்திய சக்தியாக படைத்துக்காட்ட வேண்டுமென்கிற இலட்சியத்தின் அடிப்படையில் சமூகங்கள் பலவற்றோடு உறவாடி உதவி செய்யும் சமூக நல்லிணக்கவாதியாக படைத்துக் காட்டியுள்ளார்.

நாடார் நாயக்கர் சாதி மீது கொண்ட இணக்கத்தைப் போலவே பறக்குடி சனங்களுக்கு வெளுப்பதற்கு மருதனிடம் செய்யும் பரிந்துரையிலும் ஆண்டியின் நல்லிணக்கம் தெரிகிறது. இங்கனம் அஞ்ஞாடியில் ஆண்டி தன்னிலும் தாழ்ந்த வேட்டுவ, வானர குலங்களை அரவணைத்த இராமாயண இராமனாகக் காட்சி தருகிறான்.

“ஆண்டியின் விதைப்பில் பழுதிருக்காது. ஒரு கை அள்ளினால் அஞ்சு எட்டு, அஞ்சு வீச்சு கையில் ஒரு தானியமணி தங்காது. மண்ணில் நிரக்க உருளும். குதிங்கால் மறக்காமல் சாலுக்கு அடையாளம் வைக்கும் ஏர்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி ஒருசால் இல்லை, இருசால் மடக்கு, முன்னத்தி ஏர்க்காரன் கண்ணை மூடிக்கொண்டு திரும்பலாம். நெட்டைக்கட்டை விழாது பயிருக்குச் சொல்லணுமா சலிக்கவே வேணாம்.

கருப்பி கையிலும் பழுதிருக்காது. சாலில் பயறு போட்டால் கயிறு பிடித்து நட்ட மாதிரி முளைக்கும். ரெண்டு பேரும் போட்டி போட்டுக்கொண்டு வேலையை முடிப்பார்கள் (Poomani, 2020).

என உழைப்பின் உன்னதத்தையும், ஆர்வத்தையும் விறுவிறுப்பையும் தன் நாவலில் முழுமையாக எடுத்துரைத்துள்ளார் பூமணி அவர்கள்.

“எந்தக் கதாப்பாத்திரங்களை எந்தக் காரணத்திற்காக நாவலாசிரியர் உருவாக்கி நடமாட விடுகிறார் என்பது அவர் தன் நாவலில் கையாளுகிற வி~யங்களையும் நாவலின் பொதுப் போக்கையும் பொறுத்தது” (Chockalingam, 1977).

என தி.அ.சொக்கலிங்கம் கூறுவது போல அஞ்ஞாடியின் மையக்கருவை ஆண்டி என்னும் ஆளுமையின் அடிப்படையிலேயே ஆசிரியர் அடையாளம் காட்ட முனைந்திருக்கிறார் என்பதை அறியமுடிகிறது.

பேதங்கடந்து மனிதனை மனிதன் எவ்வாறு நேசிக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக மட்டுமல்லாமல் அன்பு, ஆறுதல், அரவணைப்பு, உதவி உள்ளிட்ட மனித சமூகத்திற்குத் தேவையான நல்லறங்களின் அகராதியாக வார்க்கப்பட்டிருக்கிற மனிதப் பண்புகளின் அடையாளமாகிய ஆண்டி எதிர்வரும் சந்ததிகளுக்கு முன்மாதிரியாகப் படைக்கப்பட்டிருப்பது அஞ்ஞாடியின் சமூக அக்கறையில் ஒன்றாகி நிற்கிறது.

“மேல் சாதிக்காரர்கள் கூட அவன் விதைப்பைப்பற்றிப் பெருமையாகப் பேசுவார்கள். எவ்வளவு தான் சொத்து, நிலம் பொலம் இருந்தாலும் விவசாயிக்கு கை நிக்காது. உழைச்ச உடலுக்கு ஓய்வு இல்ல என்ற பழமொழிக்கேற்ப” எனப் பூமணி அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்.

“புள்ளீகளப் பத்தி வெசாரிக்கிற மாதிரி வெள்ளாமையைப் பத்தி வெசாரிக்கான். அவன் என்ன கஞ்சிக்கில்லாத வெங்கம்பயலா. ஈரனேருச் சம்சாரி. ஏகப்பட்ட நெலம். வாழப்பழம் போல மாடு. கெதியான வெளசாயம் சொந்த வேலையப் போட்டுட்டு வந்து ஊரானுக்கு வெதச்சுக் குடுக்கணும்னு வேதாவிதியா. அதுல அப்படியொரு பிரியம்”. (Poomani, 2020) என ஊரார் பெருமையோடு பேசுவதிலிருந்தே ஆண்டி குடும்பத்தார்க்குப் பிறருடனிருந்த தொழில்சார் நல்லிணக்கம் புலப்படுகிறது.

## முடிவுரை

மனித உயிர்கள் தொடங்கி மற்ற உயிர்கள் அனைத்தின் மீதும் ஆண்டி காட்டுகின்ற அன்பு, அரவணைப்பு, ஆதரவு எனப் பல்வேறு வடிவங்களில் நல்லிணக்கம் வேரூன்றி நிற்கிறது. அஞ்ஞாடியில் நடமாடும் அனைத்துச் சாதிகளையும் அரவணைத்துச் செல்லும் சமூக நல்லிணக்கவாதியாக உலகிற்கே உணவிடும் தலையாய உழவைப் பேணும் தலைமகனாக விளங்கும் ஆண்டியின் மூலம் உழவு போற்றப்பட்டுள்ளது. தான் தன் குடும்பமெனக் குறுகிய வட்டத்திற்குள் பயணப்பட எண்ணாமல் சமூக நலன் பேணுபவனாக ஆண்டி காணப்படுகிறான். சமூகத்திற்காக எல்லாவற்றையும் இழந்து நிற்கும் ஆண்டி அஞ்ஞாடியில் சமூகம் போற்றும் மைல் கல்லாகி நிற்கிறான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மொத்தத்தில் ஆண்டி ஓர் அசாத்திய ஆளுமை என்பதைப் புலப்படுத்தியதோடு தொழில் செய்வதில் புத்திசாலித்தனம் மட்டும் இருந்தால் போதாது. நல்லிணக்கத்துடன் சோம்பலின்றி விடாமுயற்சியுடன் உழைத்தால் தான் செல்வம் சேர இடம் உண்டாகுமென்றும் துன்பப்படுபவர்களுக்கு ஆறுதலாய் இருக்க வேண்டுமென்றும் தனது அஞ்ஞாடி நாவலில் ஆண்டி கதாப்பாத்திரத்தின் மூலம் பூமணி அடையாளப்படுத்தியுள்ளார்.

## References

Balachandran, S., (1976) Ilakkiya Thiranaivu, Aniyayam, Chennai, India.

Chockalingam, A, T., (1977) Kappiya Sinthanaigal, Selvam Publishers, Chennai, India.

Manavazhahan, A., (2013) Tholai Nooku Aaivu Nool, Ayyanar Pathippagam, Chennai, India.

Meiyappan, S., (1989) Thirukkural, Manivasagar Noolagam, Chennai, India.

Padmanabhan, R, A., (2007) Bharathiyar Kavithaigal, Sri Senbaga Pathippagam, Chennai, India.

Poomani, (2020) Agngnaadi, Griyaa publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License